**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No.789/2022 P.W. 8/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. குமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். சுரேஷ், சரவணன், சிபு, அனிஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 24.03.2021ம் தேதி மாலை 05.30 மணியளவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா1 முதல் அ.சா.4 ஆகியோர்களை தகாத வார்த்தையால் பேசி காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No.789/2022 P.W. 9 Additional Witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கார்த்தீபன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் தற்பொழுது இரணியல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த வேதமாணிக்கம் மற்றும் ஆய்வாளர்கள் ஜெயபிரகாஷ் மற்றும் தங்கராஜ் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.03.2021ம் தேதி 15.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி அங்குச் சென்று அங்கு சிகிட்சையிலிருந்த சுரேஷ், சரவணன், சிபு ஆகியோர்களை விசாரித்து சுரஷ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 167/2021 சட்டப்பிரிவுகள்436, 294(பி), 323, 506 பத்தி ஒன்று இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் 24.03.2021ம் தேதி இரவு 10.30 மணிக்கு சென்று ஸ்டார்ச் லைட் வெளிச்சத்தில் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 13 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின் வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி),323,506 பத்தி ஒன்று இ.த.ச 1860 ஆக பிரிவு மாற்றம் செய்துள்ளார். பின் வழக்கு கோப்பை ஆய்வாளர் தங்கராஜ் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்கினை அவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்துள்ளார்.

5. சாட்சி 1, 2, 3 க்கு சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்றுள்ளார். **அந்த காயச்சான்றுகள் அ.சா.ஆ. 6, 7, 8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.